4th August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விவரங்களையெல்லாம் அதிகமாக எடுத்துக் கூறுவதற்கில்லை. ஆனால், எடுத்த எடுப்பிலேயே கொல்லுவது என்ற நிமித்தம் அடியோடு கிடையாது.

திரு. செ. மாதவன் : துப்பாக்கியிலிருந்து வெளிவருகிற குண்டுகள் ஒன்றும் பயன்படாமல் போகக் கூடாது, ஒவ்வொரு குண்டுக்கும் ஒரு பிணம் வரவேண்டும் என்ற கருத்தைக் கமிஷனர் தெரிவித்தது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிஷனர் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அதை அரசாங்கம் ஆராய வேண்டிய நிமித்தம் இல்லை. ஏனென்றால், அது அவருடைய சொந்தக் கருத்து.

Police excesses.

* 67 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any petition from a member of the Assembly on 2nd February 1966 explaining police excesses in Velliankundram and Sakkudi villages in Madurai taluk; and

(*b*) if so, the action taken on it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : இதுபற்றி உள்துறை இலாகா செயலாளருக்கு மனு அனுப்பப்பட்டது. அந்த மனு பரிசீலனை செய்யப்பட்டதா ? விசாரணை செய்யப்பட்டதா ? அந்த மனுவின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை என்று சொன்னேன். ஆனால், விசாரணை நடத்தப்பட்டது. விதிப்படி நடத்த வேண்டிய விசாரணை நடத்தப்பட்டு, அஸிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் பேரில் செய்யப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. செ. மாதவன் : உள்துறை இலாக்காச் செயலாளரிடம் நேராகவே கொண்டு சென்று கொடுக்கப்பட்டது. விசாரணை நடத்தியபோது, அங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை விசாரித்தார்களா ? கொடிக் கம்பம் ஒடிக்கப்பட்டது என்பதாவது அந்த விசாரணையிலிருந்து புலப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசாரிக்கப்பட்டது என்று சொன்னேன். இந்தச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் விசாரிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி, அசிஸ்டென்ட் சூப்பரின்டென்டென்ட் ஆஃப் போலீஸ் பேரில் செய்யப்பட்ட புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்று ஏற்பட்டது என்றுதான் சொல்வேன்.

[4th August 1966

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் புகார் சம்பந்தமாக விசாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை இந்தச் சபை முன் வைக்கலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

Scheme for production of steel at Doddampatti.

* 68 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any scheme has been envisaged for the production of high speed steel and other alloy steels in private sector, with the collaboration of an American Company at Doddampatti in Salem district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) In August 1961, Messrs. All Steel Industries Corporation, Limited, have been granted a licence for the establishment of a factory at Doddampatti in Salem district for the manufacture of the following items with the collaboration of Messrs. Latrobe Steel Company of U.S.A.

Tool Steels	7,000	tonnes per annum.
Constructional Steels ..	12,500	Do.
Other alloy Steels excluding stainless steel.	17,600	Do.
Alloy Steel Castings ..	12,900	Do.

திரு. வை. சங்கரன் : இந்தத் தொழிற்சாலையில் எப்பொழுது உற்பத்தி தொடங்கப்படும்? அமெரிக்கன் கொலாபரேஷனுடைய அளவு எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திட்டம் தான் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். மொத்தமாக 'ஃபிக்ஸெட் அஸெட்ஸ்' ஒரு கோடி ரூபாய்க்கு இருக்கும். 'ஃபாரின் கொலாபரேஷன்' உடன் இதைத் தொடங்குவதாக உத்தேசம்.

Aluminium plant in Periakulam

* 69 Q.—SRI V. SANKARAN. Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have proposed to set up an aluminium plant in Periakulam in Madurai district utilising the extensive Bauxite deposits located in the Kodai and Palani Hills; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.